Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 41

வெள்ளிக்கிழமை 06 ஜனவரி 2023

மார்கழி 22 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

ரணிலுடனான சந்திப்பு:

## முன்னேற்றம் இல்லாவிடின் கூட்டமைப்பு வெளியேறும்!

### சம்பந்தன் காட்டமாகத் தெரிவிப்பு

**கொழும்பு, ஜனவரி 6**



ஜனாதிபதி ரணிலுடனான நேற்றைய சந்திப்பில் எந்த முன்னேற்றமும் இல்லை. ஜனாதிபதியுடனான சந்திப்புக்களில் எந்த முன்னேற்றமும் இல்லையென்றால், பேச்சுக்களின் தொடர்ந்து ஈடுபடுவது தொடர்பில் தீர்மானமொன்றை கூட்டமைப்பு எடுக்கும் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 'உதயனுக்கு' நேற்றுத் தெரிவித்தார்.

»11

## உள்ளூராட்சித் தேர்தல்: பெரமுன தயார்நிலை!

கொழும்பு, ஜன. 6
உள்ளூராட்சிமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன ஆரம்பித்துள்ளது. இதற்கமைய களுத்துறை மாவட்டத்தில் கள

»11

உள்ளூராட்சித் தேர்தல்

## அரசாங்கத்தின் தலையீடு எவ்விதத்திலும் இருக்காது

கொழும்பு, ஜன. 6
உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு எடுத்துள்ள முடிவை மாற்றுவதற்கு அரசாங்கம் எந்தவிதத் தலையீடுகளையும் செய்யாது. இது தொடர்பில் அரச தரப்பில் இருந்து எந்தவித உத்தரவும் பிறப்பிக்கப்பட

»11

## வடக்கில் எந்தவொரு தரப்பும் கட்டுப்பணம் செலுத்தவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 6
உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுத் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கில் எந்தவொரு மாவட்டங்களிலும் நேற்றையதினம் கட்டுப்பணம் செலுத்தப்படவில்லை.

»11

## வடக்கில் வாக்களிக்க 9 இலட்சம் பேர் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 6
எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வாக்களிக்க வடக்கு மாகாணத்தில் 8 லட்சத்து 85 ஆயிரத்து 628 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

»11

இனப்பிரச்சினைக்கான

## எந்தவொரு தீர்வுக்கும் வாக்கெடுப்பு அவசியம்

### சர்வதேசக் கண்காணிப்புடன் முன்னெடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 6
தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும், சர்வதேசத்தால் நடத்தப்பட்டு - கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணையைப் பெறவேண்டும் - இவ்வாறு பொது அமைப்பினரும் மதத்தலைவர்களும்

»11

## நிதி மோசடியில் ஈடுபட்ட இரண்டு பெண்கள் கைது

### வல்வெட்டித்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறைப் பகுதியில் பெருமளவு நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பிரிவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

»11



## பருவ மழை இல்லாமல் பெரும்போகம் பொய்ப்பு

### விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, ஜன. 6
பருவமழை பொய்த்தமையால் இந்தமுறை பெரும்போகச் செய்கையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று கிளிநொச்சி விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். கடந்த வருடம் அரசாங்கத்தால் ஏமாற்றப்பட்ட தாம் இந்த வருடம் இயற்கையால் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

»11

யாழ். மாநகரசபை விவகாரம்;

## பதவி விலகலை ஏற்காவிட்டால் பட்ஜெட் தொடர்பில் பரிசீலனை

### மணிவண்ணன் தரப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6
யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் புதிய முதல்வரைத் தெரிவுசெய்யமுடியாது. மாநகர முதல்வரின் பதவி விலகலை ஆளுநர் ஏற்காவிட்டால் பாதீடு தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று மாநகரசபை உறுப்பினரான பார்த்தீபன் தெரிவித்தார். வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஆளுநரின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருடனான

»11

இந்தியாவுக்கு கப்பல்சேவை

## கப்பல் நிறுவனத்தினருடன் நாளை கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், ஜன. 6
இந்தியாவுக்கு இந்தமாத இறுதியில் அல்லது அடுத்த மாதம் ஆரம்பத்தில் காங்கேசன்துறையிலிருந்து கப்பல் சேவை ஆரம்பிக்கவுள்ள

»11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வை வலியுறுத்த ஓரணியில் தமிழ்க் கட்சிகள் திரள்க

## வடக்கு, கிழக்கில் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.6

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்த அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும் என்று வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்தக் கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில், நாவற்குழியில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீள ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்படவேண்டும், ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மத்திய அரசால் மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும், ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் பெண்கள் ஐம்பது வீதம் இருப்பது உறுதிசெய்யப்பட வேண்டும், வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும், வடக்கு, கிழக்கில் காணப்படும் இராணுவமயமாக்கல் முற்றிலும் நீக்கப்பட்டு, தேசிய பாதுகாப்புக்கான இராணுவம் என்பது 1983ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த இடங்களில் மட்டும் நிலைநிறுத்தப்பட வேண்டும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் மத, கலாச்சார இடங்கள் தொல்பொருள் பிரதேசம் என அடையாளப்படுத்தப்பட்டு ஆக்கிரமிக்கப்படுவதும் அழிக்கப்படுவதும் உடன் நிறுத்தப்படல் வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படல் வேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மன்னாரில் மன்னார் நகர சுற்றுவட்டத்தில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்திய வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலையிலும் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-27,56)

# குறைவடைந்தது எரிவாயு விலை

கொழும்பு, ஜன. 6

லிட்ரோ எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய 12.5 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயு 201 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 4 ஆயிரத்து 409 ரூபாவாகும்.

5 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயு 80 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை ஆயிரத்து 770 ரூபாவாகும். மேலும் 2.3 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயு 38 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 822 ரூபாவாகும் என லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார். (ச-இ)

# லிட்ரோ எரிவாயுவுக்கு தட்டுப்பாடு இல்லை!

கொழும்பு, ஜன. 6

பண்டிகை காலத்தை முன்னிட்டு சமையல் எரிவாயு நுகர்வு வழமையை விட அதிகரித்துள்ளது. ஆயினும் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு இல்லை என நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு கொள்கலன்கள் தற்போது நாடு முழுவதும் சீராக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

நட்டத்தில் இயங்கி வந்த லிட்ரோ நிறுவனம் தற்போது இலாபமீட்ட ஆரம்பித்துள்ளது. தற்போது எரிவாயுவின் விலையும் குறைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டுவரை தடையின்றி சமையல் எரிவாயுவை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான நீண்டகால ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-44)

### யாழ். போதனாவில்

# புத்தாண்டு தினத்தன்று 12 குழந்தைகள் பிறப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 5

புத்தாண்டு தினத்தன்று யாழ். போதனா மருத்துவமனையில் 12 குழந்தைகள் பிறந்துள்ளன.

இதில் 9 ஆண் குழந்தைகளும் 3 பெண் குழந்தைகளும் அடங்குகின்றனர்.

புத்தாண்டு தினத்தில் இந்தக் குழந்தைகள் பிறந்ததை அடுத்து மருத்துவமனை மகப்பேற்று விடுதியில் இனிப்புப் பண்டங்கள் பரிமாறி மகிழ்ச்சி வெளியிடப்பட்டது. (ச)

# வீட்டுக்குள் நுழைந்து நகைகள் திருட்டு!

வவுனியா, ஜன. 6

வவுனியா திருநாவற்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் நுழைந்து 5 அரைப்பவுண் நகைகள் கடந்த செவ்வாய்க்கிழமை திருடப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டிலுள்ளவர் வெளியே சென்ற நிலையில் வீட்டுக்குள் நுழைந்து 3 பவுண் இரண்டு சங்கிலி, 2 அரைப்பவுண் காப்பு உள்ளடங்கலாக 9 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன என்று வீட்டின் உரிமையாளரால் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-14)

# மார்கழி விழா

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் நடத்தும் 2022 ஆம் ஆண்டுக்கான மார்கழி விழா இன்று முற்பகல் 10 மணிக்கு பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. கலைப்பீட மாணவர் ஒன்றிய உபதலைவர் இரா.தர்ஷன் தலைமையில் இடம்பெறவுள்ள விழாவில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

# கூட்டமைப்பாகவே தேர்தலில் போட்டி

## செல்வம் எம்.பி. வலியுறுத்து

தேர்தலில் கதிரைகளுக்காக தனித்தனியாக போட்டியிடுவது என்பது எமது இலட்சியம் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்தனியாக போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த முறையானது மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆளுகின்ற நிலை இல்லாத முறையாக இருக்கிறது. மக்களினுடைய எண்ணங்கள் புறக்கணிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலை சந்திக்க வேண்டி உள்ளது. ஒற்றுமையாக சந்திக்க வேண்டும் என்பது எமது நோக்கம்.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒற்றுமையாக போட்டியிட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. தேர்தலில் கதிரைகளுக்காக தனித்தனியாக போட்டியிடுவது என்பது எமது இலட்சியம் இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்தனியாக போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக போட்டியிட வேண்டும். தேர்தலுக்கான அமைப்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இல்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். ஒற்றுமையாக எமது இனப்பிரச்சினை, மக்களின் பிரச்சினைகள் போன்றவற்றை நாங்கள் தட்டிக்கேட்கும், அதைச் செயற்படுத்துகின்ற விடயங்களை கையாளுகின்ற ஒரு அமைப்பாக தொடர்ந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு செயற்பட வேண்டும்.

நாங்கள் முன்வைத்த கோரிக்கை மட்டக்களப்பில் இடம் பெற இருக்கும் தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றேன். ஒற்றுமையை வலியுறுத்துகின்ற வகையில் எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு பின் நாங்கள் என்ன செய்வது என்ற நிலைப்பாட்டை தெரிவித்துக் கொள்ள முடியும் - என்றார். (எ-இ)

# சதுரங்கப்போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ. 6

முதல்வர் கிண்ணச் சதுரங்கப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது என மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.மாநகரசபையால் யாழ்.மத்திய கல்லூரியில் இன்று 6ஆம் திகதி முதல் எதிர்வரும் 14ஆம் திகதிவரை முதல்வர் கிண்ணச் சதுரங்கப் போட்டி நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது சபை நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைக் கருத்திற் கொண்டு இந்தப் போட்டி பிற்போடப்படுகிறது. போட்டிகள் நடத்தப்படும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமைகள் ஆணைக்குழு தலையீடு

# வடக்கு கல்வி அமைச்சு மேற்கொண்ட அதிபர்கள் இடமாற்றம் இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜன. 6

வடமாகாண கல்வி அமைச்சு மேற்கொண்ட அதிபர்களின் இடமாற்றம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டை அடுத்து இடை நிறுத்தப்பட்டுள்ளது. வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படாமல் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

மு.அசோக்குமார், வதனி தில்லைச்செல்வன், கவிதா லலீசன், தரம்பெற்ற அதிபர்கள் சங்கம், மோகனா ரவிபாலா ஆகிய தரப்புகள் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், 'இடமாற்றங்கள் சேவை கருதிய இடமாற்றங்கள்' என்று குறிப்பிடுகின்றார். ஆயினும் அந்த இடமாற்றங்கள் சேவை கருதிய இடமாற்றங்களுக்குரிய எந்த அம்சங்களையும் கொண்டிருக்கவில்லை.

மேலும் முறைப்பாட்டாளர்கள் தற்போது அதிபர்களாக இருக்கின்ற வேளையில்தான், வேறொரு பாடசாலைக்கு அதிபர்கள் இல்லாமையாலேயே இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இவ்வாறிருக்கையில், இடமாற்றம் பெற்றுச் செல்லும் பாடசாலையில் பிரதி அதிபராகவும் உப அதிபராகவும் பொறுப்பேற்கும் வகையிலேயே இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே சேவையின் தேவைகருதிய இடமாற்றம் என்பதற்குரிய பொருள்கோடல்கள் இங்கு சரிவரப் பின்பற்றப்படவில்லை. எனவே இடமாற்றங்கள் ஒரு நிர்வாக நடவடிக்கை என்ற அடிப்படையில் முறையான படிமுறை எதையும் கல்வி அமைச்சின் செயலாளர் பின்பற்றவில்லை என்பது தெளிவாகின்றது. ஆதலால், இந்த இடமாற்றங்கள் வலுவிழந்ததாகவே கொள்ளப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையை கல்வி அமைச்சின் செயலர் நடைமுறைப்படுத்தாமல், இடமாற்றத்தை தொடர்ந்து முன்னெடுக்க முயன்றார்.

இதனையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவால், தமது பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தாமைக்கான விளக்கம் கோரப்பட்டதுடன், ஆணைக்குழு பரிந்துரையை நடைமுறைப்படுத்தாவிட்டால் அவமதிப்பு தொடர்பான வழக்கு தாக்கல் செய்யப்படும் எனவும் எச்சரித்திருந்தது.

இதனையடுத்து மேற்படி இடமாற்றங்கள் ஆளுநரால் நிறுத்தப்படுவதாகத் தெரிவித்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கைலாச வாகன உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சிறப்பாக இடம்பெற்றது. (ஒ-14-66)

# கிராம அலுவலர் மீது முல்லையில் தாக்குதல்

## கண்டித்து மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு, ஜன. 6


முல்லைத்தீவு மாவட்ட வெலிஓயா பிரதேசத்துக்குட்பட்ட பகுதியில் கிராம அலுவலர் மீது பொதுமகன் ஒருவர் தாக்குதல் நடத்தியதில் காயமடைந்த கிராம அலுவலர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

வெலிஓயா பிரதேசத்தின் கீழுள்ள 5 ஆம் வட்டாரத்தில் கடமையாற்றும் கிராம அலுவலரே அலுவலகத்தில் வைத்து தாக்கப்பட்டுள்ளார். அலுவலக எல்லைக்குள் வேறு ஒருவரால் வைக்கப்பட்ட பொருளை தனக்கு தருமாறு வலியுறுத்தி குறித்த நபர் கிராம அலுவலரை தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் கிராம அலுவலர் மீதான தாக்குதலை கண்டித்தும் தாக்கியவரை கைதுசெய்யுமாறு கோரியும் கிராம அலுவலகம் முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட வெலிஓயா பொலிஸார் தாக்குதலாளி என சந்தேகிக்கப்படும் ஒருவரை கைதுசெய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ச-19)



## மக்களின் நன்கொடையில்

# காரைநகர் வீதிகளில் செப்பனிடும் பணிகள்

யாழ்ப்பாணம், ஜன. 6

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் காரைநகர் வலந்தலை வீதி முதல் பழையகண்டி வரையான வீதிகளில் செப்பனிடும் பணிகள் அண்மையில் இடம்பெற்றன.

காரைநகர் பிரதேசசபையின் தவிசாளர் க.பாலச்சந்திரனின் கோரிக்கைக்கு அமைவாக காரைநகர் மக்கள் மற்றும் நலன்விரும்பிகளால் செப்பனிடல் பணிக்கு மூலப்பொருள்கள் வழங்கப்பட்டன.

அதற்கமை காரைநகர் பிரதேசசபையின் வாகனங்கள் மற்றும் பணியாளர்களுடன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணியாளர்களும் இணைந்து செப்பனிடும் பணியை முன்னெடுத்தனர். (ஒ-14-125)

## உள்ளூராட்சித் தேர்தல்

# சஜித் - சந்திரிகா கூட்டணி அமைப்பு

கொழும்பு, ஜன. 6

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும், சந்திரிகா தலைமையிலான அணியும் இணைந்து களமிறங்கவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சஜித் மற்றும் சந்திரிக்கா இருவரும் விரைவில் பேச்சு நடத்தவுள்ளனர் என்றும் கொழும்பு வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

பெரமுனவிலிருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படும் அநுரபிரியதர்சன யாப்பா சந்திம வீரக்கொடி உள்ளிட்ட அணியினரும் சந்திரிகாவுடன் இணைந்து போட்டியிடவுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-22)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 32 ஆவது ஆண்டுக்கான பொதுச்சபைக் கூட்டம் தலைவர் எஸ்.யுவேந்திரா தலைமையில் கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

அதற்கமைவாக தலைவராக எஸ்.சிவாநந்தன், உபதலைவராக பி.சாரதா, செயலாளராக வி.ஜி.தங்கவேலு, உபசெயலாளராக ஆர்.எஸ்.திலீபன், பொருளாளராக பி.ஜமுனாதேவி, பத்திராதிபராக ஸ்ரீசக்திவேல், நிறைவேற்று உறுப்பினர்களாக எஸ்.யுவேந்திரா, தே.தேவானந்த், ஏ.றஞ்சித், சைலேந்திரகுமார், சுகிர்தா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ய)

# முன்னறிவிப்பின்றி சந்தைக்குப் பூட்டு

## வியாபாரிகள் போராட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட தண்ணீரூற்று பொதுச் சந்தை முன்னறிவிப்பின்றிப் பூட்டப்பட்டதால், தமது வாழ்வாதாரம் இழக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து வியாபாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது:-

பொதுச்சந்தையை குத்தகைக்கு எடுத்தவர்களுடனான வரி விதிப்பு விவகாரம் தொடர்பில் வியாபாரிகளுக்கும் சந்தையைக் குத்தகைக்கு எடுத்தவர்களுக்கும் இடையே கருத்து முரண்பாடு நிலவியுள்ளது. அத்துடன், சந்தையின் வாசலில் புதிதாக அமைக்கப்பட்ட வாகன மறியல் தொடர்பிலும் வியாபாரிகளுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இதையடுத்து இது தொடர்பில் வியாபாரிகள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்குச் சென்று அங்கு முறையிட்டுள்ளனர். இதையடுத்தே சந்தை கரைதுறைப்பற்று பிரதேச சபையால் பூட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தவிசாளரைத் தொடர்புகொண்டபோது அவர் தெரிவித்ததாவது:-

பொதுச்சந்தை விவகாரத்தில் ஏற்பட்ட நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்க்க எம்மை முதலில் நாடியிருக்க வேண்டும். இந்த விடயத்தில் பொலிஸ் நிலையத்தை நாடியமை வரவேற்கத்தக்க விடயமல்ல.

ஆதலால், பிரதேசசபைதான் சந்தையைப் பூட்டியது. சந்தையைக் குத்தகைக்கு எடுத்தோரும் வியாபாரிகளும் ஒரு பொதுவான இணக்கப்பாட்டுக்கு வரும் வகையில் தற்போது பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன - என்றார். (ம-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரி உயர்வு எதிரொலி:

# எரிபொருள் விலை மீள அதிகரிக்கலாம்

கொழும்பு, ஜன. 6

எரிபொருள்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டமையை அடுத்து மீண்டும் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு லீற்றர் ஒக்ரேன் 92 மற்றும் ஒக்ரேன் 95 பெற்றோலுக்கான வரி 27 ரூபாவிலிருந்து 52 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் சுப்பர் டீசலுக்கு வரி 13 ரூபாவிலிருந்து 38 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

வரி அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் எரிபொருள்களுக்கான புதிய விலை இதுவரை வெளியிடப்படவில்லை.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் டீசலின் விலை 15 ரூபாவாலும், மண்ணெண்ணெய் விலை 10 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



தேசிய மட்ட உழவர் நடனப் போட்டியில் கலப்புக் குழு சிரேஷ்ட பிரிவு 1இல் விக்டோரியாக் கல்லூரி இரண்டாம் இடத்தைப்பெற்றுள்ளது. போட்டியில் க.சுவிஷேந், ஸ்ரீ. திவ்யனன், சி.லகிதன், ந.தேனுஜன், சி.கிஷோர், க.குகராஜ், து.ஹம்சனா, பா.ஜென்சிதா ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். இவர்களில் ஆண் மாணவர்கள் அனைவரும் நடன பாடம் கற்காது நடனத்திலுள்ள விருப்பத்தில் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்றுள்ளனர். ஆசிரியை மதிவதனி கௌரிசங்கரின் நெறியாள்கையுடன் சிவாஜினி பத்மாராஜா, சிவபாதம் சிவதர்சன் ஆகியோரின் பாடல், மாணவன் சுதாமாறன் யசோதரன் டோல்ஹியும், மாணவன் டேனியல் ஹார்மோனியமும் இசைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14)



அனுராதபுரத்தில் நடைபெற்ற தேசிய மட்ட கர்நாடக சங்கீத நாட்டார் பாடல் போட்டியில் யாழ்ப்பாணம் கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளது. போட்டிக்கான நெறிப்படுத்தலை ஆசிரியை விஜிதா ஜெகனும் போட்டிக்கான நிதியுதவியை பழைய மாணவன் ஜெயராஜன் ஆகியோர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14)

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாகும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் தகவல் கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** எதிர்பாராத வாய்ப்புகள் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும்.

# பாடசாலைகளுக்குச் செல்ல பேருந்துச் சேவை வேண்டும்

## பெற்றோர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 6

மாந்தை கிழக்கிலுள்ள மாணவர்கள் பாடசாலைகளுக்கு போக்குவரத்தை மேற்கொள்ள பஸ் சேவை நடத்தப்பட வேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக மாந்தை கிழக்கு மாணவர்கள் பாடசாலைகளுக்கு சென்று திரும்பக் கூடிய வகையில் பஸ் சேவைகள் நடைபெறவில்லை. இதன் காரணமாக மாணவர்கள் பாடசாலைகளுக்கு சென்று திரும்புவதில் பல நெருக்கடியை தொடர்ச்சியாக எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் பஸ் சேவைகள் இடம்பெறாததால் பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த நெருக்கடி காரணமாக மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகும் நிலைமை உருவாகியுள்ளது.

இது தொடர் பில் பல முறை கோரிக்கைகள் விடுத்தும் தீர்வுகள் எட்டப்படவில்லை. எனவே புதிய ஆண்டிலாவது மாந்தை கிழக்கு மாணவர்களின் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முல்லைத்தீவு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர். (எ-14,13)

# விழிப்புணர்வுப் பதாகை தயாரிக்கும் போட்டிகள்

கிளிநொச்சி, ஜன.6

போதைப் பொருளற்ற சமூகத்தை உருவாக்கும் முகமாக விழிப்புணர்வு பதாகை தயாரிக்கும் போட்டி கிளிநொச்சி பாரதி மகாவித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

எதிர்வரும் 8ஆம் திகதி கிளிநொச்சி பாரதி மகா வித்தியாலய பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் போதைப்பொருளுக்கு எதிராக கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

அதன் முன்னேற்பாடு நிகழ்வாக இந்த விழிப்புணர்வு பதாகை தயாரிக்கும் போட்டி நடத்தப்பட்டது.

அதிகளவான மாணவர்கள் பங்கேற்று தமக்குள் எழுந்த எண்ணக்கருவை பதாகைகளில் வெளிப்படுத்தினர். வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கவனவீர்ப்பு தினத்தன்று பாடசாலையில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தேர்தல் விளையாட்டு

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக் கோரலுக்கு இன்னமும் 13 நாள்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தலுக்குத் தயாராவதில் 'திரிசங்கு சொர்க்க' நிலையிலேயே உள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்பது தொடர்பில் இன்னமும் ஒருநிலைப்பாட்டுக்கு வரமுடியாத சூழலே காணப்படுகின்றது. ஆரம்பத்திலிருந்தே தேர்தலை ஒத்திவைப்பதற்கான நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்திருந்தமையாலேயே இந்த நிலைமை உருவாகியுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அதாவது ரணில் – ராஜபக்ச கூட்டுக்கு தேர்தலை எதிர்கொள்வதற்கான திராணி இப்போது இல்லை. தேர்தல் ஒன்றை நடத்தி தமது கையை தாமே சுட்டுக்கொள்வதற்கு அவர்கள் தயாரில்லைத்தான். ஆனால், நிர்ப்பந்தத்தின் பேரில் தேர்தலை நடத்த நேரிட்டால், குறுக்குவழியின்றி வெல்ல முடியாது என்பதும் அவர்களுக்கு சர்வ நிச்சயமாகத் தெரியும்.

எனவேதான் ஆரம்பத்திலிருந்து உள்ளூராட்சித் தேர்தலுக்கான சித்து விளையாட்டைக்காட்ட ஆரம்பித்தனர். தேர்தல் நடக்குமா? இல்லையா? என்ற இழுபறி – கயிறு இழுப்பு இருப்பதான தோற்றப்பாட்டை ஏற்படுத்தினர். அரசாங்கத்தின் ஒரு பகுதியினர் தேர்தல் நடக்காது என்றும், ஒரு தரப்பினர் நடக்கும் என்றவாறும் மாறி மாறி அறிக்கைப் போர் நடத்தினர்.

உள்ளூராட்சித் தேர்தல் நடக்கும் என்பதில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திய பின்னரான சூழலில்தான், வேட்புமனுக் கோரலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. இப்போது உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியான பின்னரும், வேட்பு மனுத் தாக்கல் முடிவடைந்த பின்னரும், தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்ற கதை உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு அமைவான நாடகத்தை அரங்கேற்ற தேர்தலை ஒத்திவைக்கக் கோரிய மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

எதிரணிகளைப் பலவீனப்படுத்த அவர்களை முழுமையாகத் தேர்தலுக்கு தயாராவதைத் தடுக்க ரணில் – ராஜபக்சக்களின் சூழ்ச்சியாகவே இதனை நோக்க வேண்டியுள்ளது.


ஏனெனில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுத் தாக்கல் கோரப்பட்டுள்ள நிலையில் எந்தவொரு பிரதான அரசியல் கட்சியும், வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடைமுறையை இன்னமும் முழுமையாக ஆரம்பிக்கவில்லை. அதேபோன்று தேர்தலில் போட்டியிடுவதற்கும் பெரும்பாலானவர்கள் ஆர்வம் காண்பிக்கவில்லை. தேர்தல் நடக்குமா? இல்லையா? என்ற சந்தேகமே இதற்குக் காரணம். இப்படி பலதரப்பட்ட சந்தேகங்கள் ஊடாக தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களை தயக்கமடையச் செய்திருக்கின்றது அரசாங்கம்.

இவற்றின் ஊடாக எதிரணிகள் பலவீனமான வேட்பாளர்களை களமிறக்கவேண்டும் என்று அரசாங்கம் விரும்புகின்றது. அவ்வாறு பலவீனமான வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டு தமது வெற்றி வாய்ப்பு உறுதி என்றால் மட்டுமே தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்காது. ஆனால், எல்லா நெருக்குவாரங்களையும் கடந்து எதிர்க்கட்சிகள் பலமான வேட்பாளர்களைத் தெரிவு செய்துவிட்டால், ஏதேனும் திருகுதாளம் செய்தாவது தேர்தலை ஒத்திவைக்கவே அரசாங்கம் முயற்சிக்கும்.

எது எப்படியோ இந்த உள்ளூராட்சித் தேர்தலை முன்னிறுத்தி அரசாங்கம் உளவியல் போரை ஆரம்பித்திருக்கின்றது. ரணிலின் இந்தத்தந்திரம் வெற்றி பெறுமா? இல்லையா? என்பதை காலம் விரைவில் சொல்லும்.

**நாளொரு நல்வார்த்தை**

"சோகம் எனும் பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதைத் தடுக்க இயலாது. ஆனால் உங்கள் தலையில் கூடுகட்டி வாழ்வதைத் தவிர்க்கலாம்"
– ஸ்மைலி



# தேர்தலைத் தடுக்க முயன்றால் நீதிமன்றத்தை நாட முடிவு

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.6

உள்ளூராட்சி தேர்தலை தடுப்பதற்கு சில முயற்சிகள் நடக்கக் கூடும். அவ்வாறு முயற்சிகள் எடுக்கப்படுமிடத்து உடனடியாக நீதிமன்றத்தை நாடி சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கான எங்களுடைய முழுமையான அழுத்தத்தைக் கொடுப்போம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது கட்சியின் சார்பிலே தேர்தல்கள் பிற்போடக்கூடாது. அது ஜனநாயகத்தை மீறுகின்ற செயல் என தொடர்ச்சியாக கூறி வந்திருக்கிறோம்.

அரசாங்கம் இந்த தேர்தலைப் பிற்போடுவதற்கு எடுத்த முயற்சிகள் எங்களுக்கு தெரியும். எதுவும் கைகூடாத நிலைமையில் தேர்தல்கள் ஆணைக்குழு சட்ட ரீதியாக அறிவித்துள்ளது. அதைத் தடுப்பதற்கு சில முயற்சிகள் நடக்கக் கூடும். அவ்வாறு முயற்சிகள் எடுக்கப்படுமிடத்து உடனடியாக நாங்கள் நீதிமன்றத்தை நாடி சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்துவதற்கான எங்களுடைய முழுமையான அழுத்தத்தைக் கொடுப்போம்.

இலங்கை தமிழரசுக்கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், எங்களின் மூலக்கிளையில் இருந்து இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கான விண்ணப்பதாரிகளை முன் வருமாறு கோரியிருக்கிறோம். இந்த தடவை சரியானவர்களையும், இளைஞர்களையும், யுவதிகளையும் இந்தத் தேர்தலில் முன் நிறுத்துவோம். மக்களின் ஆதரவை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (எ-20)

## அமெரிக்கா விசா தாமதம்: நாடு திரும்பினார் கோத்தா

கொழும்பு, ஜன. 6

டுபாய் சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது மனைவியுடன் நேற்று நாடு திரும்பியுள்ளார்.

கடந்த வாரம் டுபாய் சென்ற கோத்தாபய ராஜபக்ச அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்குச் செல்ல அமெரிக்காவிடம் விசா கோரினார்.

அமெரிக்கக் குடியுரிமையை மீள வழங்குமாறு அமெரிக்க வெளியுறவுத் துறையிடம் தனது சட்டத்தரணிகள் மூலம் விண்ணப்பித்தார்.

ஆயினும் அமெரிக்காவால் விசா வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதையடுத்து கோத்தாபய ராஜபக்ச இலங்கைக்கு திரும்பியுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன. (ச-இ)

**நாளை**

07.01.2023
சனிக்கிழமை
மார்கழி 23

சுபநேரம் : 03.32 - 05.02
ராகுகாலம் : 09.32 - 11.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.குடாநாட்டில்
# சின்ன வெங்காயம் பரவலாக செய்கை

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக சின்ன வெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

நீர்வேலி, கோப்பாய், புத்தூர், உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், நவக்கிரி, வடமராட்சி, வலிகாமம் போன்ற பிரதே சங்களில் சின்ன வெங்காயம் பெருமளவில் பயிரிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஏற்கனவே நடுகை செய்யப்பட்ட வெங்காயத்தை விவசாயிகள் அறுவடை செய்ய தயாராகி வருகின்றனர்.

இதேவேளை சின்ன வெங்காயத்துக்கு ஏற் பட்ட பற்றாக்குறையால் சந்தைகளில் தற் போது அவற்றின் விலை அதிகரித்துள்ளது.

ஒருகிலோ சின்ன வெங்காயம் 600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது என நுகர் வோரால் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

# வட மாகாண மக்களுக்கு மானிய விலையில் அரிசி
## காரைநகரில் ஆரம்பம்

காரைநகர், ஜன. 6

வடக்கு மக்களுக்கு தற்போதைய சந்தை விலையிலிருந்து 50 ரூபா குறைத்து மானிய அடிப்படையில் தரமான அரிசி வழங்கும் செயற்றிட்டம் முதற்கட்டமாக காரைநகர் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் கூட்டுறவுச் சங்கம் ஊடாக இந்த நடமாடும் அரிசி விநியோக சேவை கடந்த திங்கட் கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் தொடர்ச்சியாக 3 மாதங்களுக்கு இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதிசெய்யும் வகையில் இந்தத் திட்டம் மேற் கொள்ளப்படுகிறது.



ஆரம்ப நிகழ்வில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் பிரதிநி திகள், காரைநகர் பிரதேச செய லாளர், காரைநகர் பிரதேசசபை தவிசாளர், காரைநகர் கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் பங் கேற்றனர். (ச-27)

# வீட்டுக்குள் நுழைந்து திருட முயன்றவர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

வீட்டுக்குள் நுழைந்து திருட முற்பட்ட நபரொருவர் மக் களால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் அச் சுவேலி வடக்கு கந்தசாமி கோயில் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

வீடொன்றுக்குள் நள்ளிரவு 12 மணிக்கு நுழைந்து திருட முற்பட்டபோதே ஊர்மக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

குறித்த நபரிடமிருந்து 2 லட்சம் ரூபா பெறுமதியிலான நகையும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனை யடுத்து சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். திருட்டு தொடர்பான மேலதிக விசா ரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-14-27)


# சங்கப் பணியாளருக்கு 20 வீத ஊதிய உயர்வு!

யாழ்ப்பாணம், ஜன. 6

பணியாளர்களுக்கான இருபது வீத சம்பள உயர்வை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றில் சம்பள உயர்வு நடைமு றைப்படுத்தப்பட்டுள்ளதாக அந்தந்த முகாமை யாளர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தக் கொடுப்பனவுக்கான சகல நிலுவைகளிலும் எதிர்வரும் தைப்பொங்கலுக்கு முன்னர் பணியாளர்களுக்கு வழங்கப்படும் என வும் தெரிவிக்கப்பட்டது. (ச-17)



# ஆளுநரிடம் அனுமதி பெற்றே கட்சித் தலைவர்களுக்கு சிலை

வவுனியா, ஜன.6

வவுனியா நகரமத்தியில் அமைக்கப்பட்டுள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு அருகில் இரண்டு கட்சித் தலைவர்களுக்கு சிலை வைப்பதற்கான கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பில் வவுனியா நகரசபைத் தலைவரிடம் கேட்டபோது, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் பத்மநாபா மற்றும் புளொட் அமைப்பின் தலைவர் உமாமகேஸ்வரன் ஆகியோரின் சிலை வைப் பதற்காகவே கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் வடமாகாண ஆளுநரிடம் இதற்கான அனுமதி பெறப்பட்டது - என்றார். (ஓ-14-110)

# வழிப்பறியில் ஈடுபட்டவர் ஹெரோய்னுக்கு அடிமை

யாழ்ப்பாணம், ஜன. 6

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வழிப் பறி மற்றும் கொள்ளையில் ஈடுபட்டவர் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பகுதியில் வழிப்பறி மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் அண்மையில் முறைப்பாடுகள் பதிவு செய் யப்பட்டன. முறைப்பாட்டுக்கமைய மானிப்பாய் பொலி ஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்க மைய ஆனைக்கோட்டை பகுதியிலுள்ள 27 வயதான இளைஞர் ஒருவரை வழிப்பறி மற்றும் கொள்ளையில் ஈடு பட்ட குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸார் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை கைது செய்தனர். அதன்பின்னர் இளைஞரிடம் மேற்கொண்ட விசாரணையில் இளைஞர் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுக்கு அடி மையானவர் என்பது தெரியவந்தது.

அதனையடுத்து இளைஞருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்றும் மானிப்பாய்ப் பொலிஸார் தெரி வித்தனர். (ஓ-14-125)

# பண்டிதர் க.வீரகத்தியின் 100ஆம் ஆண்டு நினைவு

யாழ்ப்பாணம், ஜன. 6

இலக்கண, இலக்கிய பேராசான் பண்டிதர் க.வீரகத்தியின் நூற்றாண்டு நிறைவு நினைவு, கரவெட்டி சாமியன் அரசடி தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வ ரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் வி.சி.பொன்னம்பலம் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில், பேராசிரியர் அ.சண்மு கதாஸ், பேராசிரியர் சி.சிவலிங்கராசா, ஓய்வு நிலை அதிபர் கி.நடராசா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார், யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி அ.கேதீஸ்வ ரன் ஆகியோர் நினைவுப் பேருரையை நிகழ்த் தவுள்ளனர். (ஓ-14-159)



# முதியோருக்கு சத்துணவு

யாழ்ப்பாணம், ஜன. 6

மானிப்பாய் பிரதேசசபையால் ஜே/134 கிராம அலு வலர் பிரிவிலுள்ள நவாலி வடக்கு முதியோர் சங் கத்தின் முதியோருக்கு சத்துணவு வழங்கும் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

நிகழ்வில் மானிப்பாய் பிரதேசசபைத் தவிசாளர் ஜெப நேசன், பிரதேசசபை உறுப்பினர்கள், முதியவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை எதிர்வரும் காலங்களில் ஒவ்வொரு மாதமும் முதியோருக்கு சத்துணவு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தவிசாளர் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-14-27)

# வரியிறுப்பாளர்கள் ஆதனவரியை 10% கழிவுடன் செலுத்தமுடியும்

சாவகச்சேரி, ஜன. 6

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வரியிறுப்பா ளர்கள் தமது ஆதனத்துக்குரிய 2023ஆம் ஆண்டுக்குரிய வரியை 10 வீத கழிவுடன் ஜனவரி 31ஆம் திகதி வரை நகரசபை அலுவலகத்தில் செலுத்த முடியும் என தவிசாளர் அறிவித்துள்ளார்.

அனைத்து ஆதனங்களுக்குரிய அறிவித்தல் படிவங்கள் நடுக்கட்டல் உத்தியோகத்தர்களால் விநி யோகிக்கப்பட்டுள்ளன. படிவம் கிடைக்காதவர்கள் சபை அலுவலகத்தில் ஆதனவரி இலக்கத்தை தெரிவித்து வரியினை செலுத்த முடியுமெனவும் கேட் டுக்கொண்டுள்ளார். (ய-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொள்கலன் போக்குவரத்து கட்டணங்கள் குறைவடைவு

கொழும்பு, ஜன. 6

கொள்கலன் போக்குவரத்துக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன என ஐக்கிய கொள்கலன் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைய நேற்று வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2.5 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை எரிபொருள் விலை குறைக்கப்பட்டதை தொடர்ந்து இந்தக் கட்டணம் குறைப்பு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# திருவெம்பாவை தீர்த்த உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 6

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் ஆலய கண்ணகியம்மன் ஆலயங்களின் திருவெம்பாவை உற்சவ இறுதிநாளான இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு கும்பபூசையுடன் உற்சவம் ஆரம்பமாகி காலை 5 மணியளவில் வசந்த மண்டபபூசை இடம்பெற்று சுவாமி உள்வீதி வெளிவீதி வலம்வந்து ஆலய பித்தர் கேணியில் தீர்த்தமாடும் திருக்காட்சி இடம்பெறும். நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம)


**தேவை**

மேசன் மற்றும் தொழிலாளர்கள் யாழ்.நகர் மற்றும் பருத்தித்துறை பிரதேசங்களுக்குத் தேவை.

077 885 7406, 077 756 9686, 077 227 1217

**இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்**

**பிரிவு-44**

- ★Diploma in English / Spoken English
- ★Diploma in ICT
- ★Diploma in Sinhalam
- ★Diploma in Psychology & Counseling
- ★Diploma in Political Science
- ★Diploma in Media Studies
- ★Diploma in Care giver
- ★Diploma in Nursing
- ★IELTS, Life Skills - A1, B1

ஆரம்பம்:06,07/01/2023

10.00 AM

★ சான்றிதழ் பிரிவுகள் ★காலம்: 3 மாதங்கள் அச்சடித்த பாடக் குறிப்புகள்

IPS to your future திருநெல்வேலி. T.P: 021 4340229 / 076 685 2529


## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 . 06 . 1989

உதிர்வு 28 . 12 . 2012

லிங்கநாயகம் மங்கையற்கரசி தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

**சாரங்கன் (சாரு)**

திதி:– 2023.01.06 பூரணை

உறைந்து போன எம் உதிரங்களில்
உறைந்த அணுக்களாக
சாரு உன் நினைவுகள்
இன்றும் ! என்றும்!
என்றென்றும்....!

குடும்பத்தினர்

(CS/22737) 03 ஆம் வட்டாரம், நெல்வரை, நெடுந்தீவு.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 17.11.1957

உதிர்வு 23.12.2018

**திருமதி தங்கமலர் சிவசுந்தரராசா**

திதி: சதுர்த்தசி (06.01.2023)

ஆண்டுகள் நான்கானதோ!
அன்பே ஆறவில்லை எம் துயரம்
மாற்றமின்றி உன் நினைவால்
மனம் வெம்பி நிற்கின்றோம்
எம் அகத்தில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே.


சந்தம் புளியடி, காரைநகர்.

வேலுப்பிள்ளை சிவசுந்தரராசா (கணவர்) குடும்பத்தினர்.

## 29 ஆம் ஆண்டு நினைவலைகள்

வருடங்கள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன் என்றும் வணிகர்கள்

மண்ணில் 22 . 08 . 1937



விண்ணில் 06 . 01 . 1994

**அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்**

(முன்னாள் தலைவர், சாவகச்சேரி கைத்தொழில், வணிகர் மன்றம்
முன்னாள் உரிமையாளர், அம்பிகா பார்மசி, சாவகச்சேரி.

மன்றச் சேவைக்கென வந்து அமரத்துவமடைந்த அமரரின் நினைவு நாளும் நினைவுக்கூட்டமும் இன்று (06.01.2023) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மன்ற அலுவலகத்தில் உள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அங்கத்த வர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கின்றோம் (cr.38937)

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

## கண்ணீர் அஞ்சலி


யாழ்ப்பாண மாவட்டச் செயலக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலைய பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி மயூரதி கேதீஸ்வரன் அவர்களின் பாசமிகு தந்தை

**சுப்பிரமணியம் சிங்கராசா**

அவர்கள் கடந்த (21.12.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிக் கழகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 02.04.1954

இறைவன் அடியில் 20.12.2021

**அமரர் வைத்திலிங்கம் செல்வரத்தினம்**

திதி : ஆர்த்திராதரிசனம் (06.01.2023)


ஆண்டு ஒன்று போனது அப்பா ஆறவில்லை எம் துயரம்
ஆண்டுகள் ஆயிரம் போனாலும் அகலுமா
அப்பா உங்கள் நினைவுகள்
மெழுகுவர்த்தி போல் உருகி எம்வாழ்வுக்கு
ஒளி கொடுத்த அன்புத் தெய்வமே!
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
எமக்கு அப்பாவாக நீங்கள் வர வேண்டும்

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

48/3, பழம் வீதி, கந்தர்மடம். (CS 22743) (3/6) குடும்பத்தினர்

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 . 02 . 1925



மறைவு 17 . 12 . 2013

**அமரர் அருணாசலம் நமசிவாயம்**

இளைப்பாறிய ஆசிரியர், புல்லாங்குழல் வித்துவான்,
கலாபூஷணம் வேணுகானமணி)

திதி : பூரணை (06.01.2023)

அன்பிற்கும் உயரிய பண்பிற்கும்
அறிவூட்டலுக்கும் ஓர் உதாரணமாய்த் திகழ்ந்து
அற்புதக் கலைஞனாய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் பாதாரவிந்தங்களில்
சாந்தியுடன் சங்கமித்திருக்கும் எம் அன்புத் தெய்வமே!
உங்களின் பாதச்சுவடுகளில் தடம் பதித்து
நல்வழியில் வாழ்க்கையை நகர்த்தும்
எங்களின் மனத்திரையில் என்றென்றும்
நிலைத்திருக்கும் உங்கள் அன்புருவம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பாதங்களிற் பணிந்து பாசமுடன் நினைவுகூரும்

435/3, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(CS 22628) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

## வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2023

சபையானது 2023 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**பொருட்கள்**

01. காகிதாதிகள், எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. புடவைவியாபாரம்
05. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள், கொங்கிறீட் தூண்கள், சீமெந்து கற்கள்
06. கற்கள், மணல், கிரவல்
07. தீந்தை வகைகள் (Paints), நிறம் தீட்டும் பொருட்கள்
08. நீர் வழங்கும் குழாய்கள், கியூம் பைப்புகள் (Hume Pipe)மற்றும் ஏனைய பொருட்கள்
09. வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள்
10. மின் வழங்கும் பொருட்கள், மின் பாவனைப்பொருட்கள்
11. எரி பொருட்கள், உராய்வு நீக்கிகள்
12. இரும்பு பொருட்கள்
13. தீராந்திகள், பலகைகள்
14. பனைமரங்கள், சலாகைகள்
15. வாகனங்களுக்கான டயர், ரீயூப் மற்றும் மின்கலங்கள்
16. கணனி, பிரதியாக்கல் இயந்திரம், மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமி நாசினிகள்
18. பாதணிகள், தோற்பொருட்கள்
19. அலங்காரப்பொருட்கள்
20. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல், புத்தகங்கள் கட்டுதல்.
02. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்
03. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்
04. மின்சாதனங்கள் திருத்தம், மீள மின்வலுவூட்டல் (Battery Charge)
05. வளிச்சீராக்கி திருத்தம், சுத்திகரிப்பு (Service)
06. வாகனங்களின் ரியூப் ஒட்டுதல்
07. வாகன சுத்திகரிப்பு
08. கோலவுடை, சீருடை தைத்தல்
09. கணனி,பிரதியாக்கம் இயந்திரம் திருத்தல், சுத்திகரிப்பு (Service)
10. இறப்பர் முத்திரை தயாரித்தல்
11. வாகனங்கள் திருத்தம் செய்தல்.

**ஒப்பந்த வேலைகள் (ICTAD பதிவு உள்ளவர்கள் மட்டும்)**

01. கட்டட நிர்மாண வேலைகள்
02. கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாணம், திருத்த வேலைகள்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் முன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வழங்கல்/ ஒப்பந்த சேவைக்கான விண்ணப்பம் -2023" எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் தலைவர், தலைமைக் காரியாலயம் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா.எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் விண்ணப்படிவங்கள் 20.01.2023 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 024-2225737 / 024-2050067 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை,**
**வவுனியா.**

# மரண அறிவித்தல்

## சின்னையா கார்த்திகேசு



**தோற்றம்** 30.12.1942 **மறைவு** 04.01.2023

வடமராட்சி, கரவெட்டி கிழக்கு தல்லையப் புலத்தை பிறப்பிடமாகவும் யோகபுரம் கிழக்கு, மல்லாவி மற்றும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கார்த்திகேசு கடந்த (04.01.2023) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா பத்தினி தம்பதியரின் அன்புமகனும், காலஞ் சென்ற சின்னத்தம்பி கண்ணகை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, மகாலிங்கசிவம், தியாகு ஆகியோரின் அன்புச் சகோதரரும், விராம்பிட்டி நடராசா, செல்வமலர், மார்க்கண்டு ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேவகி (ஜேர்மனி), வனிதா (லண்டன்), மாலதி (ஜேர்மனி), மாலினி (இந்தியா), ரேவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்து நேசன், ஆனந்தசுந்தரம், நந்தகுமார். கஜலன், அருணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரூபன், நிதுர்சன், சயிற், சஞ்கீத், சௌமியா, சந்துஜன், சங்கீத், அப்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2023) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது கோவிற் சந்தையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 22654) 1/6

# அரகலய செயற்பாட்டாளர் ரந்திமல் கமகே கைது

கொழும்பு, ஜன. 6

'கோத்தா கோ கம' போராட்டத்தின் செயற்பாட்டாளரான ரந்திமல் கமகே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் இருந்து நேற்று வியாழக்கிழமை நாடு திரும்பிய நிலையில் விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

(ச-இ)

# தேவை

## சுத்திகரிப்பு தொழிலாளி பெண்

எமது கல்லூரிக்கு சுத்திகரிப்பு தொழிலாளி தேவைப்படுவதால்

விண்ணப்பங்களைத் தம் சுயவிபரத்துடன் 13.01.2023 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு தபால் மூலமாக அனுப்பி வைக்கவும் அல்லது நேரடியாகக் கையளிக்கவும்.

**அதிபர்,**
**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

(CR 38973)(3/6)

# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் வரியிறுப்பாளர்களுக்கான பொது அறிவித்தல்

எமது வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் காங்கேசன்துறை, மல்லாகம், தெல்லிப்பளை, மயிலிட்டி உப அலுவலகங்களில் 2023ஆம் ஆண்டு தை மாதம் 31ஆம் திகதிக்குள் 2023ஆம் ஆண்டிற்கான ஆதன வரி செலுத்துபவர்களுக்கு 10% கழிவு வழங்கப்படும். எனவே மக்கள் தங்களது ஆதனத்திற்கான ஆதனவரியினை எமது உப அலுவலகங்களில் வேலை நாட்களில் காலை 8.30 – பிற்பகல் 4.00 மணிவரை செலுத்த முடியும்.

மேலும் மேற்குறித்த உப அலுவலகங்களில் விடுமுறைநாட்களான 2023.01.07, 2023.01.21,2023.01.28 மற்றும் 2023.01.29ம் திகதிகளில் காலை 08.30 – பி.ப 04.00 மணிவரை ஆதன வரியினை செலுத்தி 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை.**

**06.01.2023.**

# ஓராண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 15.02.1944 **மறைவு** 18.12.2021

## திருமதி விஜயரத்தினம் மனோன்மணி

அமைதியின் உருவமாய்
அடக்கத்தின் இருப்பிடமாய்
பண்பின் பெருந்தகையாய்
பாசத்தின் உறைவிடமாய்
எம்மத்தியில் அன்பு ஒளியாய்
இருந்த உத்தமியே
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
இன்னும் எம்மோடு
இருந்திருக்கலாம் சிலகாலம்....

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**நினைவுகளுடன்**
**பிள்ளைகள், மருமக்கள்மார்,**
**பேரப்பிள்ளைகள்.**

**இராசவீதி,**
**கோப்பாய் தெற்கு.**

(CS 48455 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▮ அருணன் (மட்டுவில்)



மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத் தின் தீர்த்தத் திருவிழா இன்றாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# மட்டுவில் பன்றித்தலைச்சிக்கு இன்று தீர்த்தத் திருவிழா!

வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுள் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயம் மட்டுவில் வடக்குப் பகுதியில் வயலும் வயல் சார்ந்த பகுதியில் அழகுற அமைந்துள்ளது. பன்றித்தலைச்சி அம்மன் என்றால் யாழ். குடாநாட்டில் மட்டுமல்ல சைவ உலகில் அறியாதோர் யாரும் இருக்க மாட்டார்கள். அத்தனை பழமை வாய்ந்த ஆலயமாக இது அமைந்துள்ளது. அதுமட்டுமல்ல மட்டுவிலுக்கு சந்திரபுரம் என்று ஒரு பெயர் உண்டு. அதனை அன்றைய நாள்களில் திங்கள் ஊர் என்றும் குறிப்பிடுவார்கள். அம்மனின் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்த சக்திபீடமாக மிளிர்கின்றது. இவ்வாலயத்தில் குடில் வடிவில் அமைக்கப்பட்ட இருப்பிடத்தில் அம்பாள் வீற்றிருந்து அருள் வழங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. பன்றித்தலைச்சி அம்மனுக்கு ஆறுகாலப் பூசைகள் நாளாந்தம் நடைபெற்று வருகிறது. இப்பூசை வழிபாடுகள் 1946ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னர் ஆரம்பிக்கப்பட்டது. 1946ஆம் ஆண்டு மார்கழி திருவெம்பாவை நாளில் கொடியேற்றத் திருவிழா, அன்றைய ஆலய தர்மகர்த்தாவாகிய மூத்த அம்பாளின் அடியார் சின்னப்பா சிவகுருவால் ஆரம்பிக்கப்பட்டது.

**பெயரின் பின்புலம்**

பன்றித்தலைச்சி அம்மன் என்று இந்த ஆலயத்தில் வீற்றிருக்கும் அம்பாளை அழைப்பதற்கு ஆதிகாலப் பழங்கதையொன்றே காரணமாக அமைகின்றது. முற்காலத்தில் அம்பாளை வழிபாடு செய்துவந்த ஏழை விவசாயி ஒருவன் தனது விவசாய நிலத்தில் பயிரிட்ட பயிர்களை கட்டாக்காலியாக திரிந்த மாடு ஒன்று தின்று அழித்து விட்டதைக் கண்டான். அந்த மாட்டைத் துரத்துவதற்காக விவசாயி எறிந்த பொருள் ஒன்று மாட்டின் மீது பட்டதை அடுத்து மாடு இறந்துவிட்டது. இதையடுத்து மாட்டின் உரிமையாளரால் பஞ்சாயத்து சபையில் முறையீடு செய்யப்பட்டது. விவசாயி இந்த வழக்கில் இருந்து தன்னைக் காப்பாற்றுமாறு அம்மனிடம் மன்றாடினான். மாடு புதைக்கப்பட்ட இடம் அடையாளம் காணப்பட்டு தோண்டப்பட்டதை அடுத்து பன்றியின் முகத்துடன் ஓர் உருவம் வெளிவந்தது. இதுவே பின்னாளில் பன்றித் தலைச்சி அம்மன் என்று அழைக்கப்படுவதற்குக் காரணப்பெயர் ஆகியது.

**பங்குனித் திங்கள்**

இந்த ஆலயத்தில் பங்குனித் திங்கள் மகத்துவமிக்கது. பக்தர்கள் அதிகாலை தொடங்கி அம்பாளிடம் பல இடங்களில் இருந்தும் வருகை தருவார்கள். பொங்கலுக்கு வேண்டிய பொருள்களுடன் வருவார்கள். ஆலய வளாகத்தில் பொங்கல் செய்து அம்பாளுக்கு படைத்து தாமும் உண்டு அடியார்களுக்கு வழங்கி அருள் பெற்றுச் செல்வது வழக்கம். முக்கியமாக பச்சை அரிசியில் பொங்கல் செய்து மட்டுவிலில் பயிரிடும் கத்திரிக்காயில் கறிசமைத்து அம்பாளுக்கு நிவேதித்து உண்பது தனிச் சுவையும் அருளுமாகும்.


அம்மனின் தீர்த்தக்குளம் அது புண்ணிய தீர்த்தமாகும். தீராத நோய்களை தீர்க்கும் அருமருந்தாகும். ஒரு வாளி தீர்த்தமாவது தன் தலையில் ஊற்றாத பக்தர்கள் இல்லை என்றே கூறவேண்டும். அன்று முழுநாளும் பூசையும் அபிசேகமும் பொங்கலும் ஆலய சூழலை மெருகூட்டும். புத்தூரில் இருந்து பார்க்கும்போது ஆலய சூழலிலிருந்து மேலெழும் புகை முகில்களுடன் கலப்பதை காணலாம். தேவர்களும் அன்னையை வழிபட வந்துவிட்டார்கள் என்றே பார்க்கத் தோன்றும்.

அன்னையிடம் பல இடங்களிலிருந்தும் ஆடியும் பாடியும் காவடியுடன் பக்தர்கள் வருவதை காணலாம். கொடிய நோய்கள் அன்னையின் பெயரை சொல்லவே அகன்றுவிடும். கண்நோய், கொப்பளிப்பான், சின்னமுத்து என்பன அகன்றுவிடும். அன்னை ஏழைகளின் அன்புச் செல்வம். தீராத நோய்களை தீர்த்தருளுகின்ற பன்றித் தலைச்சி கண்ணகை அம்மனின் மூர்த்தி- தலம் தீர்த்த விசேடங்கள் அற்புதமானவை.

**மகோற்சவம்**

அம்பாளின் மகோற்சவம் திருவெம்பாவை காலத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பத்து தினங்கள் சிறப்பாக நடைபெறும். திருவிழாவின் ஒன்பதாம் நாள் இரதோற்சவமும் பத்தாம் நாள் மார்கழி திருவாதிரை நாளில் தீர்தோற்சவமும் நடைபெறும். எனவே அம்பாளை தொழுது எல்லோரும் இப்புவியில் இனிதாக வாழ்வோம்.

# மரண அறிவித்தல்



## திருமதி முத்தையா ஸ்டெலா நவமணி

கரம்பனைப் பிறப்பிடமாகவும் 67/1 கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தையா ஸ்டெலா நவமணி கடந்த (04.01.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மெனுவல்பிள்ளை சின்னத்துரை - ரொசலின் சின்னத்துரை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ரேமனட் முத்தையாவின் அன்பு மனைவியும், குமார் முத்தையா (UK), காந்தி மனுவேல் பிள்ளை (அவுஸ்ரேலியா), Dr. கமல் முத்தையா (UK), குமுதினி மரியநாயகம் (நோர்வே), Dr. கிறிஸ்ணி ஸ்ரீபதி (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வத்சலா முத்தையா, மகேந்திரன் மனுவேல்பிள்ளை, தர்சினி முத்தையா, மார்கஸ் மரியநாயகம், Dr. அழகக்கோன் ஸ்ரீபதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் நாளை (07.01.2023) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பின்பு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள புனித பரியோவான் ஆலயத்தில் முற்பகல் 9.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் 19.08.1927

மறைவு 04.01.2023

இல 67/1 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 22746 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நினைவெல்லாம் நீயே' இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 6

இசைத்தென்றல் ம.யேசுதாசனின் தயாரிப்பில் உருவாகி திருமறைக் கலாமன்ற வெளியீடாக வெளிவரும் "நினைவெல்லாம் நீயே" இறுவட்டு வெளியீடு, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வெளியீட்டுரையை திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரும், மதிப்பீட்டுரையை சில்லையூர் பங்குத்தந்தை அருட்பணி பாலதாஸ் பிறையன் அடிகளாரும், ஏற்புரையை இசைத்தென்றல் ம.யேசுதாசனும் வழங்கவுள்ளனர். அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி ஜீவா போல் அடிகள் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக இசைவாணர் கண்ணனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-14)


## நினைவுகள் அழியாத 29ம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்



எங்களை வளர்த்து நீங்கள்
செய்த பணியினை
நாங்களும் தொடரவேண்டுமென
எங்களுக்கு வழிகாட்டினீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
எங்கள் குலதெய்வமாகிய நுணுவில் சிதம்பர
விநாயகனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

"அம்பிகா மருந்தகம்"
கண்டி வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சிறீரஞ்சன் யதுர்சன்



நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்
ஏழாண்டுகள் சென்றபின்னும்
என்றும் அழியா நினைவுகள்

தோற்றம் 01.05.1994

மறைவு 24.12.2015

திதி:- பூரணை (06.01.2023)

குடும்பத்தினர்.
இக்கிரானை,
கந்தரோடை, சுன்னாகம்.

## சாரதி தேவை

மானிப்பாயில் இயங்கிவரும் தனியார் பாடசாலைக்கு சாரதி தேவை. மானிப்பாயிலிருந்து 3 KM தூரத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. வயதெல்லை - 35-50 ஆண்கள்.

தொடர்பு: 077 35 33851

## கார் விற்பனைக்கு

Toyota VITZ NP-CBL-xxxx இலக்க முடைய நல்ல தனிப்பாவனையில் உள்ள கார் விற்பனைக்கு உண்டு.
நிறம் - வெள்ளை

தொடர்பு: 077 5099 295

## மரண அறிவித்தல்

### திருமதி ராஜலக்ஷ்மி ராஜ்குமார்(பேவி)

(முன்னாள் தட்டெழுத்தாளர், யாழ். மாநகரசபை)



தோற்றம் 09.07.1946 மறைவு 05.01.2023

யாழ். கொக்குவிலை பிறப்பிடமாகவும் இத்தாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜலக்ஷ்மி ராஜ்குமார் (பேவி) நேற்று (05.01.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகர்சாமி செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் பவளம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற முத்துலிங்கம் ராஜ்குமார் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உதவி முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், ராஜ்கரன் (ரமேஸ்), ராஜ்பவன் (சுரேன்-கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வினித்தா, சுகன்யா (உஷா-கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ரக்சிதா, வினுராஜ், ரக்ஷன்யா, அகன்யா, தீக்ஷிதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற ஜானகி அம்மாள், ராஜினி (கனடா), மகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரசர்கேணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இத்தாவில், பளை.
0777 898 313

தகவல்:
ரா.ராஜ்கரன் (ரமேஷ்)
ரா.ராஜ்பவன் (சுரேன்)
மகன்மார்.

## மரண அறிவித்தல்



மண்ணில் 14 . 02 . 1951

விண்ணில் 05 . 01 . 2023

### திருமதி சுப்பிரமணியம் சாந்தநாயகி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சாந்தநாயகி அவர்கள் நேற்று (05.01.2023) வியாழக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், வைத்தியலிங்கம் சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர் செல்வநாயகி, தவராஜா, அமரர் குணரட்ணராஜா (குணம்), தேவராஜா (காந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதர்சன் (லண்டன்), சுஜந்தன் (லண்டன்), சுகன்யா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுமார சர்மா (கொழும்பு), பவாநிதி (லண்டன்), கானபிரியா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் நிபிஷா, அபிஷா, விபிஷா, ஜனனி, ஜனுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.01.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு: 021 205 9661

தகவல்: குடும்பத்தினர்.

(CS 22655) 1/6

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 02 . 1940

மறைவு 04 . 01 . 2023

### திருமதி இராசரத்தினம் மனோன்மணி

குரும்பசிட்டி

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும், உரும்பிராய் மற்றும் புத்தூர் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் மனோன் மணி அவர்கள் கடந்த (04.01.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் குரும்பசிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மாரிமுத்து தம்பதியரின் அருமைமிகு ஏகபுத்திரியும், காலஞ்சென்ற செல்லையா தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கதிரவேலு, சின்னத்துரை, நமசி வாயம் மற்றும் சுப்பிரமணியம் (கோப்பாய்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற புஸ்பவதி, மற்றும் தங்கேஸ்வரி (சிறுப்பிட்டி), சிவமணி (கோப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2023) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு காலஞ்சென்ற சகோதரர் நமசிவாயம் அவர்களின் சிறுப்பிட்டி இல்லத்தில் இடம்பெற்று பி.பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
ந.ஹரிகாலன் (மருமகன்)
077 3553 368

(CR 38690) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னேற்றம்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இது தொடர்பில் வினவியபோதே சம்பந்தன் இவ்வாறு காட்டமாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியுடன் இறுதியாகக் கதைத்த விடயங்களில் எந்த முன்னேற்றமும் இல்லை. இதை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளோம். நீண்டகாலமாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்புத் தொடர்பில் காத்திரமான முன்னேற்றம் தேவை. அதே கதையைத்தான் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதியுடன் 10 ஆம் திகதி அடுத்த சந்திப்பில் ஈடுபடவுள்ளோம். இதன்போது உடனடியாக நடைமுறைப்படுத்தக்கூடிய விடயங்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவொன்றை எடுக்குமாறு வலியுறுத்துவோம். முன்னேற்றங்கள் ஏற்படவில்லை என்றால் ஜனாதிபதியுடனான பேச்சுக்களில் தொடர்ந்து ஈடுபடுவதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும் - என்றார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-ம-22)

## எந்தவொரு...

ஒன்றிணைந்து வலியுறுத்தியுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் மதத்தலைவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர், குரலற்றவர்களின் குரல் அமைப்பைச் சேர்ந்தவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தினர், கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர் ஒன்றியத்தினர் இணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தமது தாயகமாகக் கொண்டு வாழும் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான பேச்சு தமிழ் அரசியல் தரப்பினருக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையில் நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெறுவதை அறிகின்றோம். எமது அரசியல் உரிமைகளை மீட்டு எடுப்பதற்காக மிகப்பெரும் விலைகளைக் கொடுத்து நிற்கும் எமது இனத்தின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் பொறுப்பில் இருக்கும் அனைவருக்கும் பெரிய அளவிலான வரலாற்றுப் பொறுப்பு உள்ளது என்பதுடன் அந்தப் பொறுப்பை அவர்கள் சரியான முறையில் கையாளுவார்கள் என்று நம்புகின்றோம். அத்தகைய நம்பிக்கையுடன், பேச்சில் ஈடுபடவுள்ள தமிழ்த்தரப்பினரின் பிரதிநிதிகள், எங்களுடைய நிலைப்பாட்டை வலுவாக முன்வைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

எந்தவொரு உத்தியோகபூர்வமான பேச்சுக்களும் ஆரம்பிக்க முன்னர், வடக்கு -கிழக்கில் இராணுவப் பலத்தை தற்போதைய மட்டத்தின் 25 வீதத்திலாவது குறைத்து, தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை உரிய சட்டபூர்வமான உரிமையாளர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் சிறிலங்கா அரசானது தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவேண்டும். எந்த உடன்பாடும் எட்டப்படுவதற்கு முன், வடக்கு - கிழக்கின் இராணுவ எண்ணிக்கை 1983க்கு முந்தைய நிலைக்குக் குறைக்கப்படவேண்டும். வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களின் உடனடி பிரச்சினையான இராணுவமயமாக்கலைக் குறைத்து சிறிலங்கா அரசு ஒரு நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்தாதவிடத்து, பேச்சுக்களை முன்னெடுப்பது அர்த்தமற்றது என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும், சர்வதேசத்தால் நடத்தப்பட்டு - கண்காணிக்கப்படும் பொது வாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணையைப் பெறவேண்டும். இதில் சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட இனப்பிரச்சனைக்கான தீர்வுகள் தெரிவுகளாக உள்ளடக்கப்படவேண்டும். இவ்வடிப்படையிலேயே எந்த ஒரு முன்னெடுப்புக்களும் மேற்கோள்ளப்படவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றோம் - என்றுள்ளது. (ம-26-7)

## பதவி...

சந்திப்பின்போதே மணிவண்ணன் தரப்பு உறுப்பினரான அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதல்வராக இருந்த மணிவண்ணன் பதவி விலகியதை அடுத்து, அவரின் இடத்துக்கு புதிய முதல்வரைத் தெரிவு செய்வதற்கு சட்டச் சிக்கல்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து மாநகர உறுப்பினர்களை பொது இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுக்களை ஆளுநர் அலுவலகம் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## பருவ மழை...

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் அரசாங்கத்தால் எமக்கு உரம் வழங்கப்படவில்லை, கிருமி நாசினிகளும் சரியான முறையில் கிடைக்கவில்லை. இதனால், பெரும்போகச் செய்கையில் பலர் ஈடுபடாததுடன், செய்கை மேற்கொண்ட விவசாயிகள் பலர் இழப்பைச் சந்தித்தனர். இந்த வருடம் அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நம்பி நாமும் செய்கையை மேற்கொண்டோம். ஆனால், பருவமழை பொய்த்தமையால் இந்தமுறை பயிர்கள் அழியும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே கூடுதலான விலையில் மண்ணெண்ணெயைப் பெற்று பயிர்களுக்குத் தண்ணீர் இறைத்து வருகின்றோம். குளங்களுக்கு அருகே உள்ள வயல்களுக்கு இது சாத்தியமாகக் காணப்படுகின்றபோதிலும் அனைத்து வயல்களுக்கும் இவ்வாறு தண்ணீர் இறைப்பது என்பது சாத்தியமற்றதே. எனவே அடுத்த ஓரிரு தினங்களில் மழை கிடைக்காத பட்சத்தில் பெரும் அழிவை எதிர்கொள்ள வேண்டி வரலாம். அரசாங்கம் இந்தப் பயிரழிவு தொடர்பில் கூடுதலான கரிசனையுடன் செயற்படவேண்டும் - என்றனர். (அ-ம-113)

## கப்பல்...

நிலையில், சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்தினருடன் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு கலந்துரையாடலொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஏற்றுமதி, இறக்குமதியில் ஈடுபட விரும்பும் வர்த்தகர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ள முடியும் என்று வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (அ-ம)

## நிதி...

36 மற்றும் 38 வயதான இரு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வழக்கொன்றின் சான்றுப் பொருள்களாக வைக்கப்பட்டிருந்த 70 பவுண் தங்கத்தை விடுவித்துத் தருவதாகத் தெரிவித்து 36 லட்சத்து 94 ஆயிரம் ரூபா பணத்தை இரண்டு பெண்களும் மோசடி செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட இரண்டு பெண்களும் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. (அ-ம-66)

## உள்ளூராட்சித்...

மிறங்குவதற்கான கட்டுப்பணத்தை களுத்துறை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் பெரமுன நேற்றுச் செலுத்தியது.

பெரமுனவின் களுத்துறை மாவட்டத் தலைவரான முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தலைமையிலே கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. நாமல் ராஜபக்ச, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சாகர காரியவசம், சனத் நிஷாந்த உள்ளிட்ட பெரமுனவின் முக்கியஸ்தர்களும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். எதிர்வரும் 20ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை கட்டுப்பணம் செலுத்துவதற்கு கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## அரசாங்கத்தின்..

வில்லை. எனவே, தேர்தல் ஆணைக்குழு தனது கடமையை உரிய வகையில் நிறைவேற்றும் என நம்புகின்றோம் - இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பாகவும் கருத்தாடல்கள் இடம்பெற்றன.

அந்தவேளையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

'உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு கோரப்பட்டுள்ளது. எனினும், தேர்தலை உரிய வகையில் முன்னெடுப்பதற்கு அரசு இடமளிக்குமா என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. ஏனெனில் தற்போது நிதி இல்லை என்ற பரப்புரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனவே, திட்டமிட்ட அடிப்படையில் தேர்தல் நடத்தப்படுமா?, 2023 மார்ச் 20ஆம் திகதிக்குள் புதிய சபைகளை நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து கொடுக்குமா? இதற்கு நேரடிப் பதில் அவசியம்' என்று நீதி அமைச்சரிடம் வினவினார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச,

'எதிரணியின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சுயாதீன ஆணைக்குழுவான தேர்தல் ஆணைக்குழுவுக்கு உள்ளது. எனவே, இந்தக் குழுவுக்கு கட்டளையிடுவதற்கோ அல்லது அதன் முடிவுகளை மாற்றியமைப்பதற்கோ அரசு அல்லது நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது. அத்துடன், தேர்தல் ஆணைக்குழுவின் நடவடிக்கைக்குத் தடைகளை ஏற்படுத்தவோ அல்லது ஆணைக்குழுவின் நிகழ்ச்சி நிரலை மாற்றியமைக்கவோ அரசு எந்தவித முடிவையும் எடுக்கவில்லை. தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்படும் என நம்புகின்றோம்' - என்றார். (அ-ம-44)

## வடக்கில்...

அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் நேற்றுமுதல் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தைச் செலுத்தமுடியும். வடக்கின் 5 மாவட்டங்களிலும் நேற்றையதினம் எந்தவொரு தரப்பும் கட்டுப்பணத்தைச் செலுத்தவில்லை. எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் கட்டுப்பணம் செலுத்தமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## வடக்கில் வாக்களிக்க...

வாக்காளர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்ட பின்னர், 18 வயதைக் கடந்தவர்களும் முதன் முறையாக வாக்காளர் பெயர்ப்பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 லட்சத்து 86 ஆயிரத்து 423 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 98 ஆயிரத்து 458 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 84 ஆயிரத்து 38 பேரும், வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 915 பேரும், மன்னார் மாவட்டத்தில் 89 ஆயிரத்து 794 பேருமாக 8 லட்சத்து 85 ஆயிரத்து 628 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியான தலைவர் இல்லாவிடில் நாட்டின் நிலைமை மோசமாகும்

## பொன்சேகா எச்சரிக்கை

கொழும்பு, ஜன.6

சரியான தலைவரிடம் இனி நாட்டை ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்போதுள்ள பிரச்சினை மேலும் தொடரும். இப்போது இருப்பதைவிடவும் மோசமாக மாறும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இராணுவத்தில் இருக்கும்போது என்னிடம் அதிக பலம் இருந்ததே. நான் எதுவும் செய்யவில்லையே. அதிகார துஷ்பிரயோகம் செய்யவில்லையே. நான் நினைத்திருந்தால் நாட்டையே உலுக்கி இருப்பேன். நான் சட்டத்தின்படியே ஜனநாயகத்தை மதித்தே செயற்பட்டேன். இராணுவத்தில் இருந்த ஒருவர் ஆட்சிக்கு வந்தால் அவர் துப்பாக்கி முனையில் மக்களைத் துன்பப்படுத்துவார் என்றா நினைப்பது? அமெரிக்காவில் ஐந்து இராணுவத் தளபதிகள் ஜனாதிபதியாக இருந்திருக்கின்றார்கள். அவர்கள் யாரும் மக்களைத் துன்பப்படுத்தும் விதத்தில் இராணுவ சர்வாதிகாரியாகச் செயற்பட்டதில்லை.

ஒருவர் அதிகாரத்துக்கு வந்தால் அவர் முதலில் என்ன தொழில் செய்து கொண்டிருந்தாரோ அதையே ஜனாதிபதியாகியும் செய்வார் என்று நினைக்கலாமா? மக்கள் என்னைப் பார்த்துப் பயப்படுவார்கள் என்றால், அவர்கள் முதுகெலும்பில்லாத ஒருவருக்குத்தான் நாட்டை ஒப்படைக்க வேண்டி வரும். விபச்சாரத்தை சட்டபூர்வமாக்குபவர்களிடமும் கஞ்சா வளர்ப்பவர்களிடமும் போதைப்பொருள் வியாபாரிகளிடமும் ஊழல்வாதிகளிடமும் திருடர்களிடமும்தான் நாட்டை ஒப்படைக்க வேண்டி வரும். இதுவரை காலமும் நடந்தது அதுதான். அதனால் தான் இந்த நாடு இப்போது படுகுழியில் வீழ்ந்துள்ளது.

மக்கள் துன்பத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். மக்கள் இனியாவது சரியாக சிந்தித்து முடிவெடுத்தால் மாத்திரம்தான் நாடு தப்பும். அவர்களும் தப்புவார்கள். கோத்தாபயவை ஆட்சிக்குக் கொண்டு வந்து நன்றாகப் பட்டுவிட்டோம். நாம் செய்த தவறு என்னவென்று தேடிப் பார்த்துவிட்டோம். இதில் இருந்து பாடம் கற்பிக்க வேண்டும் -என்றார்.

(எ-22)

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 6

ஊர்காவற்றுறையில் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் படுகாயம் அடைந்திருந்த குடும்பத் தலைவர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். அமர்தநாதன் யோகராசா (வயது - 69) என்பவரே உயிரிழந்தவராவார்.

மரண விசாரணையை யாழ்.போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். சடலம் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரிடம் சாரதி அனுமதிப்பத்திரமோ மோட்டார் சைக்கிளுக்கான ஆவணங்கள் எதுவுமோ காணப்படாத நிலையில் அவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டு, ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

(ம-26)


**Revision Class**

Revision Classes for English Literature and English Language for O/L 2022 Batch.

Contact :070 382 8632

பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
A/L 2023, A/L 2024

**கணக்கீடு**

(தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்)

**MR.BALAKAJEN**

**KBK ACCOUNTING COLLEGE**

பலாலி வீதி, கந்தர்மடம்.
சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.

**077 216 8884**

**விரைவு பொதிகள் சேவை**

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை
3-5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

**Lanka Cargo Worldwide Express**



315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். **077 0385 584**

# விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு கயட்டைப்புலம் வீதியில் நிலப்பரப்பு முறையே 10, 4 இரண்டு காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.பகுதியாகவும் பிரித்து வழங்கப்படும்.

**தொடர்பு:- 077 843 5502**
**074 373 9982**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 62 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

**தொடர்பு:- ஜெயம் 077 9865 457**
**077 0267 619**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்) நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது) ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.
- பார்வையிடும் நேரம்:- காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

**தொடர்பு:- ஜெயம் 077 8147 389**
**077 2417 589**

# நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

கடந்த கார்த்திகை மாத வளர்பிறை ஏகாதசி திதியில் (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர் திருமதி**
**கேமலதா சிவரூபன்**

(நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர், மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்)



தோற்றம் 08.03.1980 மறைவு 04.12.2022

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு பல்வேறு வழிகளிலும் உதவிகள் செய்தோருக்கும், நேரில் வந்தும், தொலைபேசி வழியாகவும், சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும் மற்றும் வேறு வழிகளிலும் ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்தோருக்கும் பல்வேறு வழிகளில் அஞ்சலிகள் செலுத்தியோருக்கும், மேலும் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 496/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS/22736) **குடும்பத்தினர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.